<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

MCOP No.399/2010 Date: 25.08.2023.

PW1- மோகன்

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

விபத்து சமயத்தில் TN 69 D 8411 டேங்கர் லாரியை நான் தான் ஓட்டி சென்றேன். இந்த விபத்து சம்பந்தமாக திருச்சி மாநகரம் போக்குவரத்து தெற்கு புலனாய்வு பிரிவு வழக்கு பதிவு செய்தனர் என்றால் சரிதான். அந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 அடிப்படையில் தான் மனு தாக்கல் செய்துள்ளேன். விபத்து கட்டண வசூல் மையம் அருகில் தான் நடந்தது. அதன் அருகில் காவல் சோதனை சாவடி உள்ளது. அங்கு இரவில் மின் விளக்கு வெளிச்சம் இருக்கும் என்றால் சரியல்ல. TN 23 AA 7855 என்ற லாரி சாலையின் இடது புற ஓரமாக நின்று கொண்டிருந்தது என்றாலும், வெளிச்சம் இருந்தாலும் நான் தான் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் லாரி மீது மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. மாதிரி வரைபடம் தாக்கல் செய்யபடவில்லை என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரர் மேற்படி லாரிக்கு காப்பீட்டு வழங்கி இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. TN 23 AA 7855 லாரியின் காப்பீட்டு ஆவணம் எப்போது யாரால் வழங்கப்பட்டது என்று நான் மனுவில் சொல்லவில்லை. 4ம் எதிர்மனுதாரர் மேற்படி லாரிக்கு எப்போதும் விபத்தின் போது காப்பீட்டு வழங்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. விபத்திற்கு என் கவனகுறைவு என்பதால் நான் நஷ்ட ஈடு கேட்க முடியாது என்றால் சரியல்ல. மருத்து பில்கள் வழக்குக்காக தயாரிக்கப்பட்டது என்றாறல் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

Sd/-மோகன்

Sd/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி